


நிறைவு ஆண்டு விழா

14.07.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Grußwort*

## Kultur braucht Pflege

Ethnische Minderheiten bringen ihre Kultur aus der alten Heimat mit hierher. Religion, Sprache und Alltagskultur in der neuen Heimat zu pflegen und an die nächsten Generationen weiterzugeben ist eine Chance, die von Duisburger Tamilen genutzt wird, auch über die Familien hinaus. Vor 10 Jahren begann der muttersprachliche Unterricht mit einigen wenigen Kindern. Heute sind es über 80 Kinder und Jugendliche die regelmäßig am Wochenende an diesem außerschulischen Unterricht teilnehmen. Die Stadt Duisburg stellt im Internationalen Zentrum der Volkshochschule dafür Räume zur Verfügung. Die Lehrer arbeiten ehrenamtlich und die Väter und Mütter bringen die Mädchen und Jungen aus dem ganzen Stadtgebiet in das Zentrum. Auf den Fluren des IZ oder auf dem Platz davor werden Neuigkeiten ausgetauscht und Kontakte aufgefrischt: Ein beliebter Treffpunkt für die Eltern. Die Kinder sind unüberhörbar echte Duisburger, die etwas Gutes aus ihrer Abstammung machen: Mehrsprachigkeit fördert die Intelligenz, sagt uns die Wissenschaft.

Ich beglückwünsche die Damen und Herren, die seit nunmehr 10 Jahren den tamilischen Unterricht organisieren und mit viel Engagement dafür arbeiten.

Das ist ein wichtiger Beitrag zur Bildung und Erziehung der mehrsprachigen Duisburger Jugend. Dafür herzlichen Dank und viele gute Wünsche für die Zukunft.

Wolfgang Esch
Leiter des Internationalen Zentrums der Volkshochschule

**உங்களின் உதவி, ஆதரவு யாவற்றையும் எதிர்பார்த்து காத்து நிற்கிறார்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர்**





**கைகள், கால்கள் இழந்தவர்களுக்கு செயற்கை கைகள், கால்கள் பொருத்தும் வெண்புறா திட்டம், பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிலையம், குருகுலம் இவையனைத்திற்கும் உங்கள் உதவியை வேண்டி நிற்கின்றோம்.**

தொடர்புகட்கு:- T.R.O., Postfach 40 12 44, 41182 Mönchengladbach.
வங்கித் தொடர்புகட்கு:- T.R.O. , Sparkasse Mönchengladbach,
Konto: 22 41 62,    BLZ: 310 500 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாலயகீதம்

கல்வியும் கலையும்
நம்மிரு கண்கள்
நல்தமிழ் மொழி
எங்கள் உயிராகும்

பன்மொழிக் கல்வியும்
பல்கலை நுட்பமும்
பயிற்றுவிக்கும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

தன்மானத் தமிழர்
பண்பா டதனை
தரணியிற் பரப்பிடும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

பாலகர் நாங்கள்
பாடி ஆடி
படித்து மகிழும் ஆலயம்
எங்கள் தமிழாலயம்

பாவலர் போற்றிட
நாவலர் வாழ்த்திட
என்றென்றும் வாழிய தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழால் உலகில் ஒன்றிடுவோம்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் போற்றும் தமிழுக்கு நேர் என்றே ஏற்று நின்ற புலம்பெயர் தமிழர் தம் தலைமுறையைக் காக்கத் தமிழ் மொழிக்காய் ஏற்ற தலைமையிலே போற்றி வழிசெய்து புறப்பட்ட தமிழ்மணிகள் ஆற்றிய அரும்பணியில் ஏற்றிய -கொடி காற்றில் அசைந்தாட கருத்துடனே மாவீரர் புகழ் பாடும் தமிழாலயம்-டியூஸ்பேர்க்.
புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் பரந்து வாழும் யேர்மனியில் தமிழ்ச் சிறார்களின் தமிழ் மொழிக்கல்வியிலும்,தமிழர் கலை,கலாச்சாரங்களிலும் அக்கறைகொண்ட பெற்றோர்களினதும் தமிழ்ப் பற்றாளர்களதும் உதவியோடு பல இடையூறுகளுக்கு மத்தியில் 09.05.1992இல் எமது தமிழாலயம் ஆரம்பிக்கப்பட்டது. முதல் மாத மாணவர் வருகை பன்னிரண்டாக இருந்த வேளையில் நிர்வாகியாக திரு க.மதிரூபனும் உதவி நிர்வாகியாக திரு.பொ.விஜயகுமார் ஆசிரியர்களாக திரு து.நந்தகுமார் திருமதி ச.பூங்குன்றன் உதவிஆசிரியராக திரு.சு.சந்திரசேகரம் ஆகியோரின் ஒருங்கமைப்பில் வளர்க்கப்பட்ட தமிழாலயம் இன்று பெரிய விருட்சமாக வளர்ந்து நிற்கும் இவ்வேளையில் ஏணிப்படிகளாக இருந்த அனைவரையும் போற்றவேண்டும்.
பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்த வேளையில் எமது மாணவர்கள் சரியாக வழிநடத்தப்பட்டார்களா என்ற கேள்விக்குப் பல பதில்கள் உள்ளன. அவையாவன:- பொதுத்தேர்வு,தமிழ்த்திறன்போட்டி,விளையாட்டுப் போட்டிகள் கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றில் பலசாதனைகள் புரிந்தமை குறிப்பிடத்தக்கவை அத்தோடு நின்றுவிடாமல் எமது கலை, கலாச்சாரங்களைப்பேணத்தக்க முறையில் வளர்ந்து வருகின்றார்கள். எமது தமிழாலயத்தில் கல்வி பயின்ற ஆரம்ப கால மாணவர்கள் இன்றைய ஆசிரியர்களாகக் கடமையாற்றுவதன் மூலம் தமிழாலயத்திற்கும் தமக்கும் பெருமையைச் சேர்த்துள்ளனர் இவர்களை இறுதிவரை வழிநடாத்திய ஆசிரியர்கள் போற்றத்தக்கவர்கள் இந்த வகையில் திருமதி மஞ்சுளா சந்திரமோகன் 1999ம் ஆண்டின் சிறந்த ஆசிரியர்களில் ஒருவராக எம்மாலும் உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணியாலும் பாராட்டைப் பெற்றமை சான்றாகும். மட்டுமன்றி ஆசிரியை திருமதி சிவபாலன்,ஆசிரியை திருமதி யோகராஜா, ஆசிரியை திருமதி சிறிராமசோதி,ஆசிரியை திருமதி. பாலேந்திரசர்மா,ஆசிரியர் திரு பாலேந்திரசர்மா,ஆசிரியர் திரு அருள்வடிவேல், ஆசிரியர் திரு. சூரி, ஆசிரியை திருமதி விக்கினேஸ்வரன் ஆகியோரின்பங்கும் எமது தமிழாலயத்திற்கு இருந்துள்ளமையால் இவர்களுக்கும் எமது பாராட்டுகள்.
இந்தவேளையில் தற்பொழுது பணிபுரியும் ஆசிரியர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் விளையாட்டுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தமிழ் உறவுகளையும் வாழ்த்திவணங்குகின்றோம்.

-நன்றி-

வாழ்கதமிழ்! வளர்கதமிழாலயங்கள்!

நிர்வாகக்குழு

தமிழாலயம் டியூஸ்பேர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் இயக்கம் யேர்மனி

## அறிவொளி பரப்பும் ஆலயம்வளர வாழ்த்துகின்றேன்

பொதுவாகத் தமிழினம் மூவாயிரம் ஆண்டுகளாக எல்லாத் துறைகளிலும் அடிமைப் பட்டஇனமாக இருந்து வந்துள்ளது ஆரியர் வருகையும் அந்நியப் படையெடுப்புக்களும் தமிழரின் மொழியியல்,அரசியல்,வாழ்வியல் தொழிலியற் கொள்கைகளை அலங்கோலப்படுத்தின என்பதை யாரும் மறுக்கமுடியாது. பழந்தமிழகம் இப்பாரினில் நனி சிறந்த நாடாக இருந்த வேளை அம்மண்ணில் தமிழர் உலகம் வியக்கவாழ்ந்தனர்.தமிழ்ப் பண்பாடுகளை எடுத்துக்கூறும் பல்வேறு இலக்கியங்களும் காவியங்களும் கவினுறப் படைக்கப்பட்டு நற்கலைகள் பேணி நற்றமிழை வளர்த்தனர் எம் முன்னோர்.ஆனால் இடையில் வந்தகபடதாரிகளின் வஞ்சனையால் வாழ்விழந்து வகை கெட்டு உருக்குலைந்து போயினர் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

நீண்ட நெடுங்காலமாக தமிழர்மீது மேலாதிக்கம் செலுத்திவந்த ஆரியரதும் ஐரோப்பியரதும் ஆட்சிகளின் வீழ்ச்சிக்குப்பின்பும் சுதந்திரமடைந்த இந்தியா,இலங்கை ஆகிய நாடுகளில் வாழும் தமிழனுக்கு விடிவே இல்லை.தமிழ் பிறந்த பாரத மண்ணில் தமிழனுக்கென தமிழ்நாடு பிரித்துக் கொடுக்கப்பட்ட போதும் அங்கே இன்றுவரை கன்னடர்,தெலுங்கர்,மலையாளிகள் வடவர்களின் ஆக்கிரமிப்பால் அரசியற் தொழிற்துறைகளிலெல்லாம் அவர்களே முன்னிற்கின்றனர். தமிழ் நாட்டைத் தமிழர் அல்லாதவர் ஆட்சி செய்யும் கொடுமையும் அதற்கு ஆலவட்டம் பிடித்து கைகட்டிச் சேவகஞ்செய்யும் இழிநிலையும் தொடர்கிறது அதுமட்டுமா சென்னை நகரச் சேரி வாழ் மக்கள் கூட ஆங்கிலக்கல்வியை ஆராதித்துக் கற்க முற்பட்டுள்ளனர் மழலையர் நிலை தொடங்கி மாபெரும் கல்விக்கூடங்கள்வரை ஆங்கிலமே போதனா மொழி. தமிழ் கற்றல் அங்கே தரங்கெட்ட செயல் எனும் அளவுக்குப் பின் தள்ளப்பட்டுவிட்டது. இன்றும் அங்கே தமிழன் அடிமைதான்.

ஆனால் இன்று ஈழத்தமிழர் போராட்டமும் புலப்பெயர்வும் தரணியெங்கும் தமிழர் பெருமையைப் பறை சாற்றி நிற்கின்றன. தமிழீத்திலே தான் தமிழ் வாழ்கிறது. தமிழீழத்தமிழர் வாழும் உலக நாடுகள் எங்கனும் தமிழும் தமிழர் கலைகளும் கலாச்சாரங்களும் பாதுகாக்கப்படுகின்றன என்று துணிந்து கூறமுடியும் இந்த நிலையில் யேர்மனியில் புலம் பெயர்ந்த நாம் எம் தேச,இன,மொழி மேம்பாட்டுக்காக உழைத்துவருவது காலத்தின் கட்டாயம் அல்லவா இதன் அடிப்படையிலேதான் யேர்மனி உலகத் தமிழர் இயக்கமும் தமிழாலயங்களும் தோற்றம் பெற்று எமது தொன்மைத்தமிழ் அழியாது இளஞ்சந்ததி தமிழ் மொழி கற்க ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி வருகின்றது.

09.05.1992ஆம் ஆண்டு உலகத்தமிழர் இயக்கத்தால் டியூஸ்பேர்க் தமிழாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பன்னிரண்டு மாணவர்களுடன் மூன்று ஆசிரியர்கள் மாத்திரமே இருந்தனர் ஆனால் இன்று இப்பாடசாலை வளர்ந்து நல் வேர் ஊன்றி கிளைகள் பரப்பி பத்தாம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் விருட்சமாகி நிற்பதைக் கண்டு உலகத்தமிழர் இயக்கம் மன நிறைவு கொள்கின்றது. இங்கே தமிழ்,சமூகவியற்பாடங்களுடன் இசை,நடனம் போன்ற கலை வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வருகின்றன. இங்கு கற்ற பழைய மாணவர்கள் சிறந்த நாடக நடிகர்களாகவும் இசைஞானம் உள்ளவர்களாக விளங்குவது மட்டுமன்றி தமக்கென ஓர் இசைக்குழுவை வைத்திருப்பதும் ஓர் நற் செய்தியாகும் இங்கே இளவர்களின் துடிப்பு காணப்படுவதும் மகிழ்ச்சிக்குரியதே!

இத்தமிழாலயத்தை வழி நடாத்தும் உறுதியான நிர்வாகம்,சேவைமனமும் நாட்டுப்பற்றும் கொண்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் தமிழ் அபிமானிகள் அனைவரின் ஒருமித்த முயற்சியால் பத்து ஆண்டுகள் கல்விப்பணியை முன்னெடுத்துச் சென்று இன்று அதன் நிறைவினைக் கொண்டாடுவதை உலகத்தமிழர் இயக்கம் மகிழ்வோடு வரவேற்கின்றது. இங்குள்ள மாணவர்கள் பொதுத் தேர்வு , தமிழ்த்திறன் போட்டிகள்,விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு சாதனைகள் படைத்து தமக்கும் தமிழாலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர் வெளிநாடு ஒன்றில் பத்து ஆண்டுகள் தாய் மொழிக் கல்வியைத் தொடர்ந்து நடாத்துவதென்பது மிகப்பெரிய காரியம் தான் அதனால் நிர்வாகம் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் தமிழ் அபிமானிகள் பாராட்டப்படவேண்டியவர்கள்.மேலும் இத்தமிழாலயம் பத்தென்ன பலநெடுங்காலம் தமிழ்ப் பணிபுரிய வேண்டு மென இதில் இணைந்து செயற்படும் எல்லோருக்கும் நன்றி கூறி வாழ்த்துகிறது உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணி வாழ்க தமிழ் வளர்க தமிழர் கலாச்சாரம்.

**இரா.நாகலிங்கம்**

**பொறுப்பாளர்**

**உலகத் தமிழர் இயக்கம்.**

**கல்விப்பணி**

**யேர்மனி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் வகுப்பு ஆசிரியை, மாணவர்கள், நிர்வாகி

**ஆசிரியை. திருமதி லதா சிறிகுமார்**

மாணவர்கள்:-

| | |
|---|---|
| நிருசா.சி | கஜாகரன்.இ |
| பதுமினி.லி | அலன்.ம |
| ஆரபி.ப | கௌதம்.சி |
| சாரங்கா.பூ | சுதர்சன்.சு |
| சுரேக்கா.மு | றொபின்சன்.ரூ |
| றாசிகா.தெ | சிவதுஜன்.ந |
| துஷியந்தி.யோ | அபிதரன்.த |
| | செரோன்.நா |
| | மதுஷான்.பா |

நிர்வாகி.பொ.விஜயகுமார்

**Vorschulklasse**



**நன்றிகள்**

எமக்கு தமிழாலயம் நடத்துவதற்கு இடம் தந்து உதவிக் கொண்டிருக்கும் வெளிநாட்டவருக்கான கல்விநிலைய அதிகாரிகளுக்கு நாம் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். அதேநேரம் எமக்கு தேவை ஏற்படும் போதெல்லாம் இடங்களைத் தயார்படுத்தித்தந்த திரு. எஷ், திருமதி. புறூக் மற்றைய உதவியாளர்கள் அனைவருக்கும் எமது தமிழாலயத்தின் சார்பில் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றோம்.

தமிழலாலயம்
டியூஸ்பேர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு.01 **Klasse: 01**
## ஆசிரியை. திருமதி லதா சிறிகுமார்

மாணவர்கள்:-

கிரிஷான்.பா
கப்சன்.யோ
சுபாராம்.ச
யதுர்ஜன்.யோ
தர்சன்.து
றேமநாத்.இ

சூரியா.சௌ
ஆகர்சினி.ந
சுதர்மிலா.சு
நித்தியா.இ
நித்திகா.சி
நிலோசினி.நா
அனிற்றா.பெ.இ
சுஜித்தா.ஜீ
ஏஞ்சல்.ம
மகிழினி.வி



## *Danksagung*

Das Thamilalayam Duisburg richtet einen großen Dank an das Internationale Zentrum, die die Räume zur Verfügung gestellt hat.
Ein besonderer Dank gilt für Frau Bruck und Herrn Esch, die im Namen des Internationalen Zentrums stets ihren Dienst erwiesen haben.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு.02 **Klasse: 02**

**ஆசிரியைகள்: செல்வி.சர்மிளா வரதராஜன், செல்வி.சுபாசினி சண்முகம்.**


மாணவர்கள்:- ராம்சந்தர்.ந, துசிகரன்.மு, சங்கீத்.சி, ஜீவூஸ்.ஜெ
ரஜானா.தெ, கீர்த்தனா.வி, லதிக்கா.வே



## ஆண்டு.03 **Klasse: 03**

**ஆசிரியைகள்: செல்வி.சுபாசினி கயிலைநாதன், திருமதி.தனலட்சுமி தனபாலசிங்கம்**

மாணவர்கள்:- சகானா.ஜெ, ரேனுகா.இ, நிரோஜினி.இ, சுகன்யா.சி, தாட்சாயினி.யோ
சுதர்சன்.து, ரமணன்.தெ, சிந்துஜன்.ந, கீர்த்திக்.வி, யதுர்சன்.பூ, தீபன்.தி, நிதர்சன்.து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு.04, ஆண்டு.06, **Klasse: 04, Klasse: 06**

**ஆசிரியை: செல்வி. யமேளா சிவஞ்ஞானம்.**

மாணவர்கள்:-

ஆண்டு:04:- தர்சன்.யோ, நிதர்சன்.ஜெ, தர்சினி.யோ, கிசாலினி.கி, சிந்துஜா.ம, லக்சினி.கோ, வைஸ்ணவி.கோ, கதிசியா.வ, நம்மியா.தி, ஸ்ரெவானி.ஜே


ஆண்டு:06:- அபிராமி.த, அன்ரனி அமல்ராஜ்.ஜே



## ஆண்டு.05, **Klasse: 05**

**ஆசிரியை: திருமதி சங்கமித்திரா பூங்குன்றன்**

மாணவர்கள்:- வினோத்.சி, துவர்மன்.செள, காண்டீபன்.கி, தினேஷ்.ஸ்ரீ யஸ்மி. யோ, சுமங்கலா.த, பிரகாஸ்.சி, சுகாதரன்.சி, கபில்தீபன்.கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு.07, 08, 09, 10. Klasse: 07, 08, 09,10.

## ஆசிரியர். திரு.சூரி

மாணவர்கள்:-

ஆண்டு:07:- நிவேதிகா.வ, சஞ்சீப்.சி

ஆண்டு:08:- றஜீவன்.சி, துர்க்காதினி.சி

ஆண்டு:09:- பர்மிளா.இ, துஸ்யந்தி.வ

ஆண்டு:10:- பிரதீபா.க, கோபிநாத்.த



**1994 ம்ஆண்டு தமிழ் திறன் போட்டி 9-10 வயதுப்பிரிவு**

## கட்டுரை:


## சி.வை.தாமோதரம்பிள்ளை

இலங்கையில் மேல்நாட்டுக் கல்வி முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நேரத்தில்தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு வந்ததைக்கண்டு மனம்நொந்த பெரியார்களில்முக்கியமானவர் தாமோதரம்பிள்ளை அவர்கள். இவர் 1832ம் ஆண்டு பிறந்தார். இவர் வட்டுக்கோட்டை செமினரிக்கல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்றுச் சுன்னாகம் முத்துக்குமார கவியரசிடம் தமிழ் படித்துப் பின்தமிழ் நாட்டிற்குச் சென்று சென்னைப் பல்கலைக் கழகத்திலும் உயர்கல்வி கற்றார் இங்கு முதல்முதலாக நடாத்தப்பட்ட கலைமானிப் பரீட்சையிலும் முதல்வராகச் சித்தியடைந்து தமிழுக்கும் மக்களுக்கும் பெருமை தேடிக்கொடுத்தார்.இதன் பின்பு தமிழ் நாட்டில் பல துறைகளில் உயர்தரபதவிகளையும் வகித்தார்.

தமிழ் மொழியின் மேல் உள்ள ஆர்வத்தினால் பழைய இலக்கியங்கள் அழியாமல் இருப்பதற்குப் பெரிதும் பாடுபட்டார் இவர் சிறார்களுக்குத் தேவையான பல புத்தகங்களை இயற்றி வெளியிட்டார் தாமோதரனார் ஆயிரத்துத்தொழாயிரத்து ஓராம் ஆண்டு இறையடி எய்தினார் இவர் தம் பெருமைகள் எண்ணில்அடங்காதவை தமிழர் உள்ளவரை இவர் புகழ் அழியாது.

மாணவன்: கோபிநாத் தனபாலசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**விரும்பிய ஓவியம்**

2002 கேணல் கிட்டுவின் ஓவியப்போட்டியில் கீழ்ப்பிரிவில் பங் 5பற்றி
1வது இடத்தைப் பெற்றுக்கொண்ட ஓவியம்.
மாணவன் சங்கீத் சிறிகுமார். ஆண்டு 02.
**Sangeth Srikumar bekam für diese Zeichnung bei einem Kunstwettbewerb den 1.Preis**



நடன வகுப்பு. ஆசிரியை. செல்வி. பிரதீபா கயிலைநாதன்

சாரங்கா. பூ, சுரேக்கா.மு, றஜானா. தெ, றாசிகா. தெ, துஷியந்தி. யோ
**Die erste Unterrichtsstunde im klassischen Tanz Bharatha Nadyam**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2002ம் ஆண்டின் ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சிறார்களின்வழிகாட்டிகள்



செல்வி. சர்மிளா வரதராஜன். ஆண்டு.02, திருமதி. லதா சிறிகுமார். பாலர் வகுப்பு, ஆண்டு.01
செல்வி. சுபாசினி சண்முகம். ஆண்டு.02, திருமதி. சங்கமித்திரா பூங்குன்றன். ஆண்டு.04 (சுற்றாடல்)
ஆண்டு.05 (தமிழ்), திருமதி. தனலட்சுமி தனபாலசிங்கம். ஆண்டு.03 (சுற்றாடல்),
செல்வி. சுபாசினி கயிலைநாதன் ஆண்டு.03. (தமிழ்), செல்வி. யமேளா சிவஞ்ஞானம். ஆண்டு.04,06.


**Das Lehrerkollegium des Thamilalayam Duisburg**




04.09.93ம் ஆண்டு 1வது ஆண்டு விழாவைச் சிறப்பித்த மாணவர்களும் ஆசிரியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SchülerInnen und LehrerInnen beim 1. Jahresfest**



விடுதலையையும் பயங்கரவாதத்தையும் வேறுபடுத்தும் காட்சி
2002 கேணல் கிட்டுவின் ஓவியப்போட்டியில் மேற்பிரிவில் பங்குபற்றி
1வது இடத்தைப் பெற்றுக்கொண்ட ஓவியம்.
மாணவி பிரதீபா கயிலைநாதன் ஆண்டு 10.
**Pradiba Kailainathan bekam für diese Zeichnung bei einem Kunstwettbewerb den 1.Preis**



சங்கீத வகுப்பு ஆசிரியை, மாணவர்கள்
ஆசிரியை திருமதி. தர்மினி தில்லைநாதன்

மகிழினி. வி, கீர்த்தனா. வி, ஆகர்சினி. ந, சுஜித்தா. ஜீ, அனிற்றா. பெ.இ, அபிராமி. த, சுகன்யா. சி, சுமங்கலா. த, யஸ்மி. யோ, றம்மியா. தி, துர்க்காதினி. சி, நிரோஜினி. இ, கிரிஷான். பா, சங்கீத். சி, வினோத்.சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Klasse den Tamilischen klassischen Gesangs Karunathakasangitham**

# தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - யேர்மனி
# Tamil Co-ordinating Committee - Germany

## தமிழைக்கற்போம் தமிழனாய் வாழ்வோம்

ஒரு இனம் நாகரீகம் அடைந்துள்ளதை மற்றைய இனத்தவர் அங்கீகரித்திருந்தால் அதற்கு காரணம் அந்த இனம் ஒரு மொழிவளம் கொண்டதாக கருதப்படும் அந்த வகையில் பார்க்கையில் இலக்கிய வளங்கொண்டு பண்பாட்டு விழுமியங்களுடன் வாழும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். ஆனால் காலத்தின் போக்கில் அரசு அமைத்து சிறப்போடு வாழ்ந்தமொழி அன்னிய ஆட்சியாளர்களின் கைக்குள் சிக்குண்டு அதன் தனித்துவத்தை இழந்து இன்று பல்வேறு மொழிகளின் சொற்கள் இடைசெருகப்பட்டு அது உயிர்வாழ்ந்து வருகிறது. அதற்கு மூலகாரணம் அந்தமொழிக்குச் சொந்தக்காரர்களான பலகோடி தமிழர்களுக்கு ஒரு நாடு இல்லாமையே , இன்று அந்த மொழி இலங்கைத்தீவில் வாழும் தமிழர்களால் ஒரு அரசமொழியாக வாழும் தகுதிக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு வருகிறது. மொழி வாழவேண்டுமாயின் தமிழ் இனம் இறைமையோடு கூடிய தன்னாட்சி பெற்றிருக்க வேண்டும். இன்று ஈழத்தமிழர்கள் தமது உயிரைக்கொடுத்து அளப்பரிய அர்ப்பணிப்புகளைச் செய்து போராடிவருகிறார்கள். இதற்கு மூலகாரணம் எமதுமொழி இரண்டாந்தர மொழியாகவும் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்கு பிரதேசம் அன்னிய ஆட்ச்சியாளர்களின் அடக்குமுறைக்கு உட்படுத்தப் பட்டதேயாகும்.

இதனால் ஒரு புரட்ச்சிகரப்போராட்டத்தைத் தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்தி வருகிறார்கள் 1980ம் ஆண்டிற்குப் பிற்பட்டகாலத்தில் ஆயுதப்போராட்டம் முனைப்புப் பெற்றதால் தமிழர்கள் புலம்பெயர்ந்து அன்னியநாடுகளில் தஞ்சம்புக ஆரம்பித்தார்கள், அதனால் தஞ்சம் புகுந்த நாடுகளில் வாழும் பிள்ளைகளின் நலன்கருதி தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டதன் விளைவால் யேர்மனியில் உருவானதே உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணி. இன்று இந்தக்கல்விப்பணி ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட இளம்சிறார்களுக்கு தமிழ், சுற்றாடலுடன், நுண்கலைகளையும் கற்பித்துக்கொண்டு தனது பன்னிரண்டாவது ஆண்டை நிறைவுசெய்து பதின்மூன்றாவது ஆண்டில் தடம்பதிக்கும் இவ்வேளையில் பலதமிழாலயங்கள் பத்தாவது ஆண்டுவிழாவை நிறைவேற்றிவிட்டன, இன்னும் சிலதமிழாலயங்கள் பத்தாவது ஆண்டை சிறப்பாக கொண்டாட ஆயத்தமாகின்றன ஆகையால் பத்தாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் ஒவ்வொரு தமிழாலயங்களையும் மிக மகிழ்வோடு வாழ்த்துகின்றேன். இதற்காக உழைத்த கல்விப்பணிப் பொறுப்பாளர் உட்பட ஆசிரியர்கள் நிர்வாகிகள் பெற்றோர்கள் அனைவருக்கும் எமது அமைப்பின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலம்பெயர்ந்து வாழும் எமது இளம் சமுதாயத்தினர் தமது தாய்மொழிக்கு முழுமையான அக்கறை எடுத்து மேலும் மேலும் கற்பதனால் அவர்களுடைய கல்விசிறப்படைவதோடு தமிழர்களின் பாரம்பரியத்தை அன்னியதேசத்தவர் அறியவும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஆகையால் யேர்மனியில் வாழும் அனைத்துத் தமிழ்ப் பெற்றோர்களும் உங்கள் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியைக் கற்றுக்கொடுத்து அவர்களின் அடையாளத்தை அன்னிய மண்ணில் தெரியப்படுத்த வேண்டியது உங்களது பெரும் கடமையாகும் என்பதை அன்புடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒவ்வொரு தமிழாலயங்களும் எத்தகைய நெருக்கடிகள் வந்தாலும், எமது பிள்ளைகளின் மொழிவளர்ச்சி உங்கள் கைகளில் தரப்பட்டுள்ளதால், எல்லாவற்றையும் தாண்டி, பொறுப்புணர்வோடு உழைத்து எமது மொழி அன்னிய மண்ணில் வாழும் எம்சிறார்களிடையே வேரூன்றி தளைத்து வளர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

~நன்றி~

**" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் "**

இ. சிவனேசன்,
பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப்புலிகள்,
யேர்மனிப்பணியகம்.

TCC, Postfach 101 613, 46 0 16 Oberhausen, Germany
Tel: 0208 205 99 103 Fax:0208 205 99 104

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் எரிகின்ற தீ இன்னும் ஏன் அணையவில்லை

ஈழத்தில் எரிகின்றதீயினை அணைக்கவோர் நேரம் இதுவென்று ஏங்கும் தமிழ்மக்களே!
தமிழீழத்தில் எரிந்திட்ட உடல்களை எண்ணுங்களே! அதன் உண்மையை உணருங்களே!
தமிழர் தாகத்தை ஏந்திய மாவீரர் உயிர்களைப் போற்றுங்களே!-போற்றும்
தமிழருக்காகவே என்கவி மாலைகள் மலர்கின்றன! பல மாலைகள் மலர்கின்றன.

காப்புடன் செய்யுளை படிக்கவே எனக்கிங்கு வரிகள் குறைகின்றன நம் முகவரி தொலைகின்றன
தோப்புடன் வயல்களும் எரிகின்றதால் தமிழ் காப்பவர் குறைகின்றனர் தமிழ் யாப்பினைத்
தொலைத்தவர் யாரடா தமிழர் கூட்டினைக் குலைத்தவர் தானடா -காட்டிக்கொடுத்தவர்
தோலை உரிக்கவோ, அன்றிக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தவோ, காலங்கனியுது தீயும் அணையுது.

தமிழீழம் பிடித்திடத் தோள்கள் துடிக்குது ஆனையிறவோடு வாழை பழுக்குது பாளை ஈன்ற பனை
ஓலை துளிர்க்குது வேலை முடித்திட வேங்கை துடிக்குது வெந்து தணிந்த காடு துடிக்குது வேதம்
உரைத்திட நாவு துடிக்குது தலைவர் பாதம்பணிந்திட நாங்கள் துடிக்கிறோம்-எரிகின்ற தீயினை
அணைக்கத் துடித்திடும் தமிழருக்காகவே கவி எழுதத் துடிக்கிறேன் தமிழீழம் அடையத் துடிக்கிறேன்

பலங்கொள்ள மறுத்திட்ட தமிழர்களே! தங்கள் பங்கைக் குறைத்திட்ட விலையர்களே! தமிழ்
ஈழம் எரிந்திட்ட போதிலும் தங்கள் மனம் எரியாத வீணர்களே!எரிகின்ற தீயிலே எண்ணையை ஊற்றிய
கோழைகளே! மாலைகள் வேண்டுமோ? மன்னிப்பு வேண்டுமோ?தாலி இழந்தவர் சாபங்கள் வேண்டுமோ?
ஈழத்தில் எரிகின்ற தீ உங்கள் எண்ணத்தில் எரிகீன்ற தீ எங்கள் கன்னத்தில் வழிகின்ற நீர்.

விண்ணில் எழுந்தது ஒரு தீ வேதனைகொண்டது ஒரு தீ மாறுதல்பண்ணும் மரணத் தீ
விடுதலைத் தாகம் வளர்த்தது ஒரு தீ பகைத் தீமை வளர்த்தது ஒரு தீ அணைகின்ற தீயெது
எரிகின்ற தீ எது எங்கள் கையில் விடுதலைத் தீ அணைகின்ற தீ உனக்கு எரிகின்ற தீ எனக்கு
அணைகின்ற தீ எதிரி கையில் எரிகின்ற தீ நம் கையில் வெற்றி நமக்கு விடுதலையில் வெற்றி........

புற்றிலிருக்கும் பாம்புகளே! தமிழ் பற்று நிறைந்த தமிழர் நாம் வேங்கை படை முன்னணியில்
வெற்றி கொள்வோம் வெகு விரைவில் சத்தியத்தை தவறாத உத்தமனாம் எங்கள் அண்ணன்
பற்று வைத்த பாதையிலே பண்புடனே பின்பு செல்வொம் கல்வி, கலை,வீரமெனக் கருத்துடனே
கற்றுவரவேண்டுமென்ற கருத்துடனே கவிதை சொன்னேன் தமிழீழம் கிடைக்கும் வரை.

நன்றி வணக்கம்

**2002 தமிழ்த்திறன் போட்டியில் யேர்மன் ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற கவிதை.**
**இப்பாராட்டுக்குரியவர் மாணவி நிவேதிகா வரதராஜன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
Tamilische Rehabilitation Organisation e.V.
Postfach 40 12 14
41182 Mönchengladbach

# முன்னோடியாகத் திகழும் தமிழாலயத்தை வாழ்த்துகிறேன்

தமிழர்களின் வரலாற்றில் தமிழைப் போற்றியபோதெல்லாம் தமிழன் கம்பீரமாக வாழ்ந்திருக்கிறான். தமிழை நேசித்த தமிழ் மன்னர்கள் தமிழை மறந்து, மதிமயங்கி அன்னிய சக்திகளிடம் ஏமாளியானபோதுதான் தமிழனுக்கு அவமானங்கள் அடுக்கடுக்காக வந்து சேர்ந்தன. கொடியும் கொற்றமும் தமிழனது கைவிட்டுப்போன காட்சிகள் அப்போதுதான் ஆரம்பமாயின.

தமிழீழத்தில் மீண்டும் தமிழைத் தமிழன் போற்றும் காலம் ஆரம்பமானபோது, அதனை அடக்கி ஒடுக்க உலகளாவிய தமிழ் எதிரிகள் ஒன்றுசேர்ந்து நம்மை நசுக்கினர். அந்த ஒடுக்குமுறையின் அகோரம் தாங்காமல் உலகமெங்கும் பரவி ஓடிய நாம் நமது தாய்த்தமிழை மறவாது வாழவேண்டியது அவசியம். சிங்களம் தமிழை அழித்தது, பௌத்தம் தமிழை அழித்தது என்றெல்லாம் சொல்லி எமது தவறை நாம் மூடிமறைக்க முடியாது. சனநாயக மரபுகள் கட்டிகாக்கப்படும் ஐரோப்பிய மண்ணில் வாழ்ந்துகொண்டு தமிழ்கற்க நமக்குத் தடை இருப்பதாகச் சொன்னால் மூடன் கூட நம்மைக் கேலிசெய்வான்.

இந்த நிலை உணர்ந்து, யேர்மனியில் உலகத்தமிழர் இயக்கம் பல்லாண்டுகளாக சிறப்பாகப் பணியாற்றி நமது அடுத்த பரம்பரையின் சிந்தனையில் தமிழை ஊற்றெடுக்கச் செய்துள்ளது. அந்தத் தமிழ் ஊற்றை ஆர்வத்துடன் அனுபவித்து, தமிழை மறவாத தமிழர்களாக நமது செல்வங்கள் உருவாக நேரத்தையும் சிரமத்தையும் அர்ப்பணித்துப் பணியாற்றும் டியூஸ்பேக் தமிழாலய ஆசிரியர்களும், நிர்வாகிகளும், பெற்றோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். யேர்மனிதழுவிய பரிசுகள் பலவற்றைத் தொடர்ந்து பெற்றுவரும் டியூஸ்பேக் தமிழாலய மாணவர்கள் வாழ்த்துக்குரியவர்கள்.

ஆண்டுவிழாக்காணும் டியூஸ்பேக் தமிழாலயத்தை வாழ்த்துகின்றேன்.

பொறுப்பாளர்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம் யேர்மனி

Postfach 40 12 14 - 41182 Mönchengladbach - ☎ 0202/47829753 –Fax: 0202/2812295
Stadtsparkasse Mönchengladbach - Kto.Nr. 22 41 62 - BLZ: 310 500 00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 வது ஆண்டு விழாவில் சிறப்பாக நடைபெற்ற நாடகத்தின் ஒரு காட்சி
Szene eines Theater stückes beim 1.Jahresfest



07.06.1997 இல் நடைபெற்ற மாணவர் எழுச்சி நாள் ஊர்வலத்தில் டியூஸ்பேர்க் தமிழாலய மாணவர்கள்
SchülerInnen des Thamilalayam Duisburgs bei einer Demonstration



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்போம் உயர்கல்வி காப்போம் எம் தேசம்

கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை என்று திருக்குறளில் கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் அழியாத செல்வமாகிய கல்வி ஓர் மனிதனின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு பெறும். வரம்பு உயர, நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும் போல ஓர் மனிதனின் வளர்ச்சிக்குப் பின்னாலே ஓர் நாட்டின் வளர்ச்சி தொடரும். ஆகவே ஒவ்வொரு சந்ததியின் முதற் கடமை கல்வி கற்பதே.

எமது தேசத்தின் புதிய சந்ததியின் ஒரு பகுதி தற்போது நாடு விட்டு நாடு வந்து, புலம் பெயர் நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள தமிழீழ மாணவர்களாகவும், வெளிநாடுகளிலேயே பிறந்து வளர்ந்து வருகின்ற என்னைப் போன்றவர்களாகவும் அமைகின்றனர். இங்கு நாம் இனமத கலாச்சார வேறுபாடுகளால் எவ்வளவோ சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம். இருந்தாலும் இந்நாட்டின் நடைமுறையிலுள்ள இலவச உயர்கல்வித் திட்டத்தை பயன் படுத்தி, எமது நாட்டிற்கும் வாழ்க்கைக்கும் நல்லதோர் அத்திவாரம் அமைப்பது எமது கையில் உள்ளது.

இங்கு நாம் உயர்கல்வி கற்று சிறப்பான தொழில்கள் பெறுவதற்காக பல வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வொருவரின் திறமைக்கு ஏற்றவாறு பல விதமான தொழில்களும் கல்விமுறைகளும் இருக்கின்றன. ஆகவே எமது திறமையை நாம் அறிந்து, அதன்படி எமது கல்விப்பாதையை நோக்கிச் செல்ல வேண்டும். இவ்வேளையில் எமது பெற்றோரின் கடமை எம்மை ஊக்குவிப்பது ஆகும். இவர்கள் தங்களின் பழமைவாய்ந்த பார்வையை விட்டு காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றவாறு, தோன்றும் புதிய தொழில்களை அறிந்து எமது திறமையையும், விருப்பத்தையும் புரிந்து எமது கல்விப்பாதையில் எமக்கு ஒத்துழைக்க வேண்டும். அதேவேளையில் புதிய கல்விமுறைகளை அறியாத எமது பெற்றோருக்கு இளைய சமுதாயமாகிய நாம் இதனை விளக்க வேண்டும்.

ஒரு புறம் நாம் இங்கு இந்நாட்டு மொழியில் கல்வி கற்றாலும், மறு புறம் எமது தாய்மொழியை திறம்பட கற்று, இங்கு பெற்ற அறிவை எமது நாட்டிற்கு பயன்படுத்தக் கூடிய ஆற்றலை நாம் பெற வேண்டும். இதற்கு எமது தாய்மொழியாகிய தமிழை கற்பது அவசியமானது. மாவீரர்களின் தியாகத்தினாலே நாளை மலரப் போகின்ற தமிழீழத்தை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டிய பொறுப்பு எம்மிடமே உள்ளது. பொருளாதாரத்தினால் மட்டும் எம் தேசத்தை அபிவிருத்தி அடைந்த நிலைக்கு கொண்டு வர முடியாது. இங்கு நாம் கற்கும் உயர்கல்வியும், தொழிற்துறைக்கல்வியும் தான் நம் நாட்டையும் சமுதாயத்தையும் முன்னேற்றுவதற்குப் பெரிதும் பயன்படும்.

இவ்வெண்ணங்களை மனதில் கொண்டு எமது கல்விப்பயணத்தை வெற்றியோடு நோக்கி எம் தேசத்தையும் காப்போம்.

2002 ம் நடைபெற்ற தமிழ்த்திறன் கட்டுரைப்போட்டியில் பங்குபற்றி ஜேர்மன் ரீதியாக 2வது இடத்தைப்பெற்றுக்கொண்ட மாணவி. செல்வி. பிரதீபா கயிலைநாதன்.

1998, 1999 ம் ஆண்டு தமிழ் மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 2வது இடத்தைப் பெற்ற மாணவர்களுடன் நிர்வாகி. திரு. பொ.விஜயகுமாரும், பயிற்சியாளரான திரு.ந.ஜெயராசா அவர்களும்

1998 und 1999 erreichte die Fußballmannschaft beim tamilischen Fußballtunier den 2.Platz




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ம் ஆண்டு நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் 1வது இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள்

Im Jahr 2000 errang die Fußballmannschaft den 1.Platz



2001ம் ஆண்டு நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டியில் அணிவகுப்பில் முதல்முறையாக பங்குபற்றிய டியூஸ்பேர்க் தமிழாலய மாணவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. DR. S.J. EMMANUEL
Pastor



KATH. PFARRAMT
ST. MARIA MAGDALENA

Horneburger Straße 58
45711 Datteln-Horneburg
Germany
Tel : 0049 (0) 2363 62520
Fax : 0049 (0) 2363 361167
e-mail : esjay.raj@t-online.de

23.06.2002

## வாழ்க வளர வாழ்த்துகின்றேன்

டியூஸ்பேர்க் தமிழாலயம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை பெருமையுடன் சிறப்பாகக் கொண்டாடும் இந் நேரத்தில், அதன் சகல அங்கத்தினர், உத்தியோகத்தினர், நண்பர்கள், நற்கொடையாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்கள், எந்த அந்நிய சூழலிலும் தமது ஊற்றையும் உறவையும் மறவாது, தமிழ்த் தாயின் பிள்ளைகளாக பிரமாணிக்கத்துடனும் பெருமையுடனும் தொடர்ந்து வாழ்வதற்கு இப்பேர்பட்ட கழகங்கள் ஆற்றும் பணியை மிகைப் படுத்திக் கூற முடியாது. வீட்டிலே தாய் மொழி, நாட்டிலே நாட்டு மொழி, உலகரங்கிலே ஆங்கில மொழி - என்ற இலட்சியத்திற்கு இணங்க, எமது பிள்ளைகள் மும்மொழி வித்தர்களாகத் வளர முயல்கின்றார்கள்.

பிறக்கும் ஈழமும் பன் மொழிகள் தொடர்புள்ள நாடாகவே திகழும்.

இம்முயற்சியில் உங்கள் ஆலயமும் பத்து ஆண்டுகளாக அரும் பெரும் சேவை புரிந்திருக்கின்றது. தொடர்ந்து உங்கள் சேவை வளரவும் செழிக்கவும் இறைவனை இறஞ்சி உங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றேன்.

பணி. எஸ். ஜே. இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணியின் 10வது ஆண்டு விழாவில்
கௌரவத்தைப் பெற்றுக்கொள்ளும் நிர்வாகியும், ஆசிரியருமான
திரு.பொ.விஜயகுமார் அவர்கள்
Auszeichneung des Direktors



## விழிப்பு

பல ஆண்டுகளுக்கு முன் டியூஸ்பேர்க் என்னும் ஓர் ஊரில் பல ஆயிரம் மக்கள் வாழ்ந்து வந்தனர். அவ்வூர் மக்களிற்கு சகல வசதிகளும் இருந்தும், அவர்களின் மனதில் ஓர் அறிய முடியாத சோகம் இருந்தது. அவர்கள் பல முயற்சிகள் எடுத்தும் அவர்களால் அக் கவலையை அகற்ற முடியவில்லை.

பலர் அவ்வூருக்கு வந்து, அம் மக்களின் சோகத்தை தீர்ப்பதாக கூறினார். ஆனால் உதவி புரிய வந்தவர்கள், வந்த வேகத்தில் திரும்பிச் சென்றார்கள். அந்த ஏமாற்றங்களை சந்தித்த அவ்வூர் மக்கள் சோர்வோடு இருக்கும் பொழுது, ஒரு நாள் கல்விப்பணியன் என்னும் ஓர் பெரியவர் அந்த ஊருக்கு வந்தார். அந்தப் பெரியவர் பல ஊர்களுக்குச் சென்று அங்காங்கு வாழும் மக்களின் துயரத்தை அறிந்து தீர்த்து வைப்பவர். அதேபோல் இவ்வூர் மக்களின் கவலைக்கான காரணத்தை விரைவில் அறிந்தார்.

அந்த மக்கள் அனைத்து வசதிகளுடன் வாழ்ந்தாலும், அவர்களிற்கு என்று கலை, கலாச்சாரம், மொழி என்பன இல்லாமல் வாழ்வதே அவர்களின் துயரத்தின் காரணம். அவர்களிற்கு உதவி புரிவதற்கான ஏற்பாடுகளை செய்ய அப்பெரியவர் ஆரம்பித்தார். ஆனால் ஏமாற்றத்தை சந்தித்த அவ்வூர் மக்கள் அவரை நம்பத் தயங்கினர். அந்த வேளையில் விஜயன், ரூபி என்னும் இருவர் நம்பிக்கையுடன் உதவி புரிய முன்வந்தனர். அவர்கள் கலை, கலாச்சாரம், மொழி என்பன வளர்ப்பதற்கு ஓர் ஆலயத்தை ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் விழிப்பூட்டும் அந்த ஆலயத்திற்கு சில தொண்டர் தான் சென்றனர். ஆனால் நாளடைவில் விஜயனதும் ரூபியினதும் முயற்சியால் பத்து தொண்டர் நூறு தொண்டராக பெருகினார்கள். அந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது.

கற்றது கையளவு, கல்லாதது கடலளவு என்றவாறு இவ்வாலயத்தில் சேர்ந்த தொண்டர்கள் கையளவு, சேரவேண்டிய தொண்டர்கள் கடலளவு ஆகும்.

இவ்வாலயம் மென்மேலும் வளர்ந்து,
பல்லாயிரம் தொண்டர்களுக்கு வழிகாட்டி,
பேரும் புகழுடனும் பணியாற்ற
வாழ்த்தும் ஓர் தொண்டர்.

க.சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போதைய தமிழாலய மாணவர்களின் பெற்றோர்களின் ஒருபகுதியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. வினோத் செரோன் சங்கீத.சி கர்சன்.து ஆசாலவ்சினி பி.சந்தீப்

அமுதரன்

நிதர்சன் கிரிஷான் இ.பார்மிலா

சுஜித்தா மகிழினி கயாகரன் நிலோசினி ஆரபி

சி.சுகன்யா

சி.கீர்த்தியா அலன் ரொபிஷன் மதுஷொன் கஜேந்திரன் கவிதீபா

ஹேமந்த் ரேணுகா.ஜி

சுபாராம் நித்தியா சுபாகரன்

சுதர்சன் சூரியா துஷியந்தி து.சுதர்சன்

நிருசா சாரங்கா லக்சினி.கோ

வைஷ்ணவி.கோ சுதர்மிலா து.நிதர்சன்

ரசிகா ஜெ.சுகானா

சிவகுஜன் ரம்மியா

சுரேக்கா

யதுர்ஜன் வி.கார்த்திகா கௌதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org